எதிர்த்தோர்—தொடர்ச்சி.

41. திரு. துரை முருகன்
42. திரு. அ. செல்வராசன்
43. திரு. அ. ரகுமான்கான்
44. திரு. ஏ. டி. குலசேகர்
45. திரு. து. புருஷோத்தமன்
46. திரு. ப. பொன்னுரங்கம்
47. திரு. மு. அரங்கநாதன்
48. திரு. மு. ப. முனுசாமி

நடுநிலை வகித்தோர் எவருமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9—2—1981 அன்று காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

195. பருத்தியைப் பொறுத்தவரையில், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை, போளூர் ஆகிய வட்டங்களை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 5-11-1980ம் தேதியிடப்பெற்ற 2175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

196. பென்னாகரம் அங்காடிக்கு அறிக்கையிடப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பதற்கு என்று தருமபுரி அங்காடியின் அறிக்கையிடப்பட்ட பகுதியிலிருந்து 126 கிராமங்களை நீக்குவது குறித்து, வேளாண்மைத் துறையின் 27-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2276 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1981 பிப்ரவரி 7]

197. பொச்சம்பள்ளி அங்காடிக்கு அறிக்கையிடப்பெற்ற அங்காடிப் பகுதியாக சில கிராமங்களை அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 28–11–1980 ஆம் தேதியிடப் பெற்ற 2286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

ஆ. **அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

36. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால் நடை நோய்கள் (திருத்த) சட்டமுன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/1981).

37. 1974–75, மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY